சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவம்.

மலர் 4. | காலயுத்திஸு கார்த்திகைமீ 1918ஸு நவம்பர்மீ | இதழ் 11

விநாயகர் துதி.

மாவேலை யாலமதை யடக்கித்தன்னுண் மண்டலக மண்டமெலாம் வளர்ந்துதானோர், காவேயின் முன்னுதித்த வரசிற்றோன்றிக் கடம்புபுனை குருந்தினுக்குத் துணையதாகித், தாவேதந் தலைகாண்டற் கரியதாகித் துன்பமுறு பிறவியெனுந் துகள்சேர்வெய்யி, லாவேனைத் தன்னடியா நிழலிற்சேர்த்த வத்திதனைப் பத்திசெய்து முத்திசேர்வாம்.

(இ-ள்.) பெரிய சமுத்திரத்திலுண்டாகிய ஆலகாலவிஷத்தைத் தன் கண்டத்துக்குள்ளடக்கி, உலகங்கள் பலநெருங்கிய அண்டங்களெங்கும் வியாபித்து முற்காலத்தில் ஒரு மூங்கிற் புதரில் தோன்றிய இறைவனிடத்தில் திருவவதாரமாகி, கடப்பம் பூமாலையணிந்த முருகக்கடவுளுக்குச் சகோதரராகி, நிர்மலமான வேதங்களாலுந் திருமுடியைக் காணுதற்கரியதாய், துன்பமே மிகுந்துள்ள பிறவியாகிய குற்றம் பொருந்திய வெய்யிலில் அகப்பட்டுத் தவிக்கும் அடியேனைத் தன் திருவடியாகிய நிழலில் சேர்த்த யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பத்தியோடு வணங்கி முத்தியிற் சேர்வாம்.—எ-று.

அத்தி யென்னும் மரப்பெயருக்கேற்ப மா, வேல், ஆலம், வேய், அரசு, கடம்பு, குருந்து என்னும் மரப்பெயர்கள் வருவிக்கப்பட்டன. (இது கந்தபுராணச் சுருக்கச்செய்யுள்.)

சிவஞானபோதம்.

ஆருஞ் சூத்திரம்—இரண்டாமதிகரணம்.

(219-வது பக்கத்தொடர்ச்சி.)

உதாரண வெண்பா.

உணர்ப வசத்தாத லொன்றுணரா தொன்றை
யுணருநீ தானுணரா யாயி—னுணருமுனிற்
றனிரண்டா மெய்கண்டான் றன்று லுணர்தலாற்
றனிரண்டாய்க் காணுன் றமி.

(இ-ள்.) உணர்ப அசத்து=(நின்னால்) அறிவனவாய கருவிகளெல்லாம் (நான்காஞ் சூத்திரத்திற் கூறியவாறு) அசத்தாம்.

(அசத்தெனவே அசித்தாதலும் பெறப்பட்டது). ஆதல்=ஆதலால்—ஒன்று ஒன்றை உணராது=(அவற்றுள்) ஒரு கருவியும் ஒன்றாகிய முதற்பொருளை யறியமாட்டாது-(அஃதாவது பதிப்பொருள் பாசஞானத்தால் அறியப்படாதது என்பதாம்)—உணரும் நீதான் உணராய்=அக்கருவிகளால் அறிகின்ற நீதானும் அம்முதற்பொருளை யறியமாட்டாய். (அஃதாவது பதிப்பொருள் பசுஞானத்தாலும் அறியப்படாதது என்பதாம்).—ஆயின்=நீ ஆய்ந்தறிவையாயின்—உணரும் உனின் இரண்டுஆம்=உணர்கின்ற நின்னின் வேறாம். (அஃதாவது உன்னால் கருவிகளைக் கொண்டு அறியப்படும் பொருள்கள் உனக்கு வேறுதல்போல முதற்பொருளும் உனக்கு வேறாம்)—மெய்கண்டான்=(உயிர்க்கு அறிவுவிளங்கும்) உண்மையை அறிந்தோன்—தன்னால் உணர்தலால்=தன் அறிவு அச்சிவத்தினருளின் அடங்கி அதுவாய்நின்று அதனாலே அதனையறியுமாதலால்—தமி=அத்தனி முதற்பொருளை—இரண்டாய் காணான்=(ஏனைப்பொருள்களை அறியுமாறுபோல்) வேறாய்நின்று அறியமாட்டான்.

உணர்ப=உணர்வன. ஒன்று=ஒன்றும். உன்னின் என்பது உனின் எனநின்றது புறநடை. தமி=தமியை. தான் அசை.

இவ்வெண்பாவினாற் போந்த பொருள்—“அறிந்த பொருளைப் பின் வேறுவழியாய் அறிதலுங் கூடும். (எங்ஙனமெனில் ஸ்பரிச உணர்ச்சியால் அறிந்த பொருளை ரூப உணர்ச்சியாலும் அதாவது கண்ணினாலும் அறியலாம்.) அதுபோல் முன்னே பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறிந்த முதற் பொருளையே பின்னர் பதிஞானத்தால் உயிர் அறியும். ஆதலால் முதற்பொருள் பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாதது என்றல் பொருந்தாது”. என்று கூறும் நையாயிகரை மறுத்து, பதிப்பொருள் பசு பாசஞான்ங்களால் அறியப்படின், அவ்விரண்டு ஞானங்களினால் அறியப்படும் குடம் படம் முதலியவை உயிரின்வேறுதல்போல், முதற்பொருளும் உயிரின் வேறாம். வேறாகும் பொருள்கள் அஞ்ஞானத்தா லுண்டாகும் சுக துக்கங்களையுண்டாக்குமே யன்றி அஞ்ஞானத்தினின்றும் நீங்கிய பேரின்பத்தைத் தரா. ஆதலால் ஆன்மா அறியும் உண்மையை உணர்ந்தோன் (முதற்பொருள் ஏனை உலகப்பொருள்கள்போல அசத்தல்லாத தனிமுதற்பொருளாகையால்,) அதனை யறியுங்கால் தன் அறிவு அதன்கண் அடங்கி அதுவாய் நின்று அதனாலே அதனை

யறிவன். ஏனைய பொருள்களைப்போல் வேறாய்நின்றறிவானல்லன் என்று கூறி முதற்பொருள் வாக்குமனோதீதமாய் நின்றே கோசரமாமென வலியுறுத்தப்பட்டது.

கீழ்வருஞ் செய்யுட்கள் இவ்வுதாரண வெண்பாவின் கருத்தை விளக்குவனவாம்:—

திருத்தாண்டகம்.

மைப்படிந்த கண்ணாளுந்தானுங் கச்சிமயானத்தான் வார்சடையானென்னினல்லா, னொப்புடையனல்ல னொருவனல்ல னோரூரனல்ல னோருவமனில்லி, யப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல்லா, லிப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவனென்றெழுதிக் காட்டொணாதே.

திருவாசகம்.

இன்றெனக்கருளி யிருள்கடிந்துள்ளத் தெழுகின்றஞாயிறேபோன்று, நின்றநின்றன்மை நினைப்பறநினைந்தே னீயலாற்பிறிது மற்றின்மை, சென்றுசென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறையுறைசிவனே, யொன்றுநீயல்லையன்றி யொன்றில்லை யாருன்னையறியகிற்பாரே.

உண்டோ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை
தொண்டனேற் குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே.

தாயுமானசுவாமிகள் பாடல்.

அருளா லெவையும் பாரென்றான்—அத்தை, யறியாதே சுட்டி யென் அறிவாலே பார்த்தேன்—இருளான பொருள் கண்ட தல்லால்—கண்ட வென்னையுங் கண்டில னென்னேடி தோழி—சங்கர சங்கர சம்பு.

தக்ஷிணாமூர்த்தத் தத்துவார்த்தம்.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

இது பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற்புராணத்திலுள்ளது.

(இதன் பொருள்.) சிவபெருமான் கல்லால் நீழலின் கண்ணே தென்முகமாக எழுந்தருளியிருந்து, நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும், வேதாந்தங்களையும் நன்கு அறிந்த வல்லவர்களாகிய சனகாதி நால்வருக்கும், வேதவேதாந்தங்களினால் தம்மையுந் தலைவனையும் சந்தேக விபரீதமற உணரமாட்டாது மயங்கின மயக்கம் நீங்குதற் பொருட்டு, வாக்கினால் இத்தன்மைத்தென்று சொல்லக்கூடாத பூரணமாயும், வேதங்களினால் அறுதியிட்டுக் கூறமுடியாததாயும், உயிர்ப்பொருள் உயிரில் பொருளாகிய எல்லாம் தன்னையின்றித் தனித்து நில்லாமையால் அவையாவும் தானாகியும், ஆயினும், அவற்றுள் உயிர்போலப் பிறந்திறந் துழலுதலும், உயிரில் பொருள்போலத் தோன்றிநின் றழிதலும் இல்லாமையால் அப்பொருள்களுக்கு வேறாயும் இருந்த தனது சொருபத்தை இருந்தவாறே திருமேனிகொண்டருளிய முறைமையில் வைத்துக்காட்டி, அவ்வுண்மையை, வாக்காற் சொல்லாது அறிவுக்கறிவாய் நின்று அருளால் அறிவித்தனர். இப்பேருபகாரம் புரிந்த தக்ஷிணாமூர்த்தியை, நாம் ஆராய்ச்சி அறிவாகிய மனத்தால் நினையாது அநுபவ அறிவால் அறிந்து பிறந்திறந் துழலுந் துன்பத்தை வெல்வாம் என்றவாறு.

நான்மறையாறங்கமுதல் என்றதனால் வேதாந்தமும் உடன் கொள்ளப்படும்.

கேள்விவல்லார்கள் என்றதனால் கேட்டும் மலைவு நீங்காமை பெறப்படும்.

இருந்து காட்டி யென்று இங்கே பொதுப்படக் கூறினரேனும், எவ்வாறிருந்து காட்டினரென்பதை வேதத்துக்குப் பொருளருளிச்செய்த படலத்திற் கூறுகின்றார். அது வருமாறு:—

"சீதளப்பளிக்குமேனியும் பளிக்குச் செழுமலை பதித்தது போன்ன, பாதமுஞ் செவ்வாய் மலருமுக் கண்ணும் பங்கயச் செங்கர நான்கும், வேதபுத் தகமும் அமுதகும் பமுந்தன் விழிமணி வடமு மெய்ஞ் ஞான, போதமுத் திரையுந் தரித்ததோர் தனிமைப்போ தன்முன் றூழ்ந்தெழுந் தேத்தா." என்பது.

இதனால் முயலகனை மிதித்த திருவடியொன்றும், வீராசனமான மற்றொரு திருவடியும்; வலப்பக்கத்திலுள்ள ஒரு திருக்கரத்தில் சின்முத்திரையும், மற்றொரு திருக்கரத்தில் உருத்திராக்கமணிவடமும், இடப்பக்கத்திலுள்ள ஒரு திருக்கரத்தில் அமுதகும்பமும், மற்றொரு திருக்கரத்தில் சிவஞானபோத புத்தகமும் துலங்க எழுந்தருளி இருந்தாரென்றவாறாயிற்று.

இவ்வாறு கொண்டருளிய திருமேனிப் பாங்கின் தத்துவார்த்தமாகிய உண்மைப் பொருள் வருமாறு:—

சின்முத்திரை:— கரத்திலுள்ள ஐந்து விரல்களுள், நடுவிரல் முதலாகப் பின் மூன்று விரல்களை வேறுபிரித்து, சுட்டுவிரலைப் பெருவிரல் அடிப்பாகத்தில் அடங்கும்படி மடக்கி வைத்தலாம்.

பெருவிரல் ஏனைய நான்கு விரல்களோடுங் கூடித் தனித்தனி ஒவ்வொரு விரலையும் பொருந்துதற்கு உரிமையுடையதாயும் அவற்றின் வேறுமாயும் இருத்தலால் அது எல்லாமாயும் அல்லதுமாயும் நின்ற பதியைக் குறிக்கும்.

சுட்டுவிரல், பெருவிரலை உள்ளடக்கியும் நடுவிரலுக்கு உள்ளடங்கியும் இருத்தலால், அது ஆணவமலத்தி னுள்ளடங்கிப் பதியைக் கீழ்ப்படுத்திப் பசுபோதமாய் நிற்கும் உயிரைக் குறிக்கும்.

நடுவிரல், பெருவிரலோடு பிரிப்பின்றி நிற்கும் சுட்டுவிரலைத் தன்னுள் அடக்கி நிற்றலால், அது பதியோடு பிரிப்பின்றி நிற்கும் உயிரைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் ஆணவ மலத்தைக் குறிக்கும்.

அணிவிரல், நடுவிரலுக்குட்பட்டு இருத்தலால், அது ஆணவமலச் சேட்டையால் அனாதியே உண்டான விருப்பு வெறுப்பென்னும் மூலகன்மத்தைக் குறிக்கும். மூலகன்மத்தைப்பற்றிச் சிவஞானசித்தியாருரையில் "கன்மமு மூலங்காட்டி" என்றவிடத்து விரித்துக் கூறியிருக்கின்றோம். அவ்விடத்துக்காண்க.

கடைவிரல், அணிவிரலுக்கு உட்பட்டும் முற்பட்டும் இருத்தலால், அது விருப்பு வெறுப்புக்கு உட்பட்டும் முற்பட்டும் விளங்கும் மாயா காரியங்களைக் குறிக்கும்.

ஆகவே, ஆணவம் கன்மம் மாயையென்னு மும்மலங்களும் நீங்க, உயிர் சிவபெருமான் திருவடி வியாபகத்துள் இரண்டறக் கலந்து நிற்றலை உணர்த்துவது சின்முத்திரையென அறிக.

அமுதகும்பம்:—மலநீக்கமும், திருவடி அடைதலாகிய சிவப் பேறும் என்னும் பயன் இரண்டும் வாய்ப்பதற்குச் சாதனம் சிவ ஞான மென்பதை உணர்த்துவது.

உருத்திராக்கமணிவடம்:— பாசஞான பசுஞானங்களில் நின் றும் நீங்கிச் சிவஞானத்தில் டாயினுங்காலத்தும் பழைய பழக்கவாச னையால் பாசக்கூட்டங்களைப்பற்றநேரும். நேருங்கால் அவற்றிற் செல்லாது சிவஞானத்தில் நிலைத்தற்பொருட்டுத் திருஐந்தெழுத் தைக் கணிக்கவேண்டுமென்பதை உணர்த்துவது.

முயலகனை மிதித்த திருவடி:—சிவப்பேறுபெற்ற சிவஞானிகள் தேகமுள்ள அளவும் ஜீவன்முத்தராய் வாழ்வர்; வாழுங்காலத்து அற்றம் பார்த்து ஆணவமலம் தலையெடுக்கா வண்ணம் அதனை அமிழ்த்துதற்குரிய சாதனஞ்செய்து வரல்வேண்டு மென்பதையும் வருவரென்பதையும் உணர்த்துவது.

வீராசனம்:— ஜீவன்முத்தர் மலநீக்கத்திற்குரிய சாதனம் செய்துவருதலோடு மலநீங்கிய சிவனடியார்களோடு சிநேகம் செய் தல் வேண்டுமென்பதையும், சிவபத்தரல்லாதாரோடு இணங்காது வீரமாய் இருக்கவேண்டுமென்பதையும் உணர்த்துவது. எவ்வா றெனின், முயலகனை மிதித்த திருவடியோடு மற்றொரு திருவடி சேர்ந்திருத்தல் மலநீங்கிய சிவபத்தர்களோடு சிநேகமாயிருத்தலை யும், வீராசனம் சிவபத்தரல்லாதாரைப் பொருட்படுத்தாமையினை யும் குறிக்குமாற்றால் என்க. சிவபத்தரோடு சேர்ந்தோர் அல்லா தாரைப் பொருட்படுத்தாரென்பதை "ஈசன்பல் கணத்தெண்ணப் பட்டுச், சிறுமான் ஏந்தி தன் சேவடிக் கீழ்ச்சென்றங், கிறுமாந் திருப்பன் கொலோ." என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக் கும் வலியுறுத்தும்.

சிவஞானபோதம்:—மூன்று திருக்கரங்களினாலும் இரண்டு திருவடிகளினாலும் உணர்த்திய உண்மைப்பொருளை இனிது விளக் குவது. வேதபுத்தகம் என்பது சிவஞானபோதமாகுமோ எனின்,

ஆகும். எவ்வாறெனின், கூறுதும். வேதம் என்பது அறிதற் கருவியாயுள்ளது. அது எந்த எந்தச் சமயத்தில் யார் யாருக்கு எதனை எதனை அறிவிக்கவேண்டுமோ அவற்றை அறிவிப்பதாகும். இங்கே சனகாதிமுனிவர்கள் வேதவேதாந்தங்களை உணர்ந்தும் மலவு நீங்காமையால் அவர்களுடைய மலவை நீக்கும் தகுதியுடையதாய் இருத்தல்வேண்டும். அன்றியும் ஒரு நியாயாதிபதி சிவில், கிரிமினல் என்ற இரண்டு கோர்ட்டையும் நடத்துதற்கு உரிமையுடையவராயிருந்து, சிவில்கோர்ட்டை நடத்துங்கால் அதற்குரிய சட்டப்புத்தகத்தையும், கிரிமினல் கோர்ட்டை நடத்துங்கால் அதற்குரிய சட்டப் புத்தகத்தையும் தன் பக்கத்தில் வைத்திருப்பது முறைமை; அவ்வாறே மூன்று திருக்கரங்களினாலும் இரண்டு திருவடிகளினாலும் உணர்த்தப்படும் விஷயங்கள் அடங்கிய புத்தகமே அது சமயம் தமது திருக்கரத்தில் இருத்தல் வேண்டும். மலவு நீங்குதற்பொருட்டு வைத்திருக்குங் காரணத்தினாலும், விஷயங்களை அடக்கி வைத்திருக்குங் காரணத்தினாலும், வேதபுத்தகமென்பது சிவஞானபோதமே என்க. விஷயங்கள் அடங்கியிருத்தல் எவ்வாறெனின்:—

சிவஞானபோதம் பன்னிருசூத்திரங்களை யுடையது. அவற்றுள் முன் ஆறு சூத்திரம் பொது அதிகாரம். பின் ஆறு சூத்திரம் சிறப்பதிகாரம். இது சாதன இயல் பயனியல் என இரண்டியல்களையுடையது. இதன் விரிவெல்லாம் சிவஞானபோதச் சிற்றுரை விளக்கத்துட் கூறியிருக்கின்றும் அவ்விடத்துக்காண்க. இவ்விடத்துவேண்டும் பொருளைமட்டும் கூறுதும். ஏழாஞ்சூத்திரம் அதிகாரி இயல்பு கூறுதலின், சனகாதிமுனிவர்களைக் குறிக்கும். எட்டாஞ் சூத்திரம் சிவபெருமான் குருவடிவாய் வந்து அனுக்கிரகித்தல் கூறுதலின், தக்ஷிணாமூர்த்தியைக் குறிக்கும். ஒன்பதாஞ் சூத்திரம் சிவஞானத்தை அனுட்டிக்கு முறையும், திருவைந்தெழுத்தைக் கணிக்குமுறையும் கூறுதலின், அமுதகும்பத்தையும் உருத்திராக்கமணிவடத்தையும் குறிக்கும். பத்தாஞ் சூத்திரம் மும்மல நீக்கம் கூறுதலின், சின்முத்திரையில் மூன்று விரல்களின் நீக்கத்தைக் குறிக்கும். பதினொராஞ் சூத்திரம் சிவபெருமான் திருவடி அடைதலாகிய சிவப்பேறு கூறுதலின், சின்முத்திரையில் பெருவிரலின் அடிப்பாகத்தில் சுட்டுவிரல் மடங்கிநிற்றலைக் குறிக்கும். பன்னிரண்டாஞ் சூத்திரம் சீவன் முத்தர் மலநீக்கஞ் செய்தலும் சிவ

னடியாரோ டிணங்குதலும் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே கண்டு வழிபடுதலும் கூறுதலின், முயலகனை மிதித்த திருவடியினையும் வீராசனமாய் அமர்ந்த திருவடியினையும் குறிக்கும். வீராசனத்தால் இனம் பற்றித் திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிபடுதல் கொள்ளப்படும். இவ்வாறு திருக்கரங்களினாலும் திருவடிகளினாலும் உணர்த்தப்படும் உண்மைப்பொருள்களைச் சிவஞானபோதமேயன்றி வேறெந்த நூல்களும் ஒருசேரத் தொகுத்துணர்த்துவதில்லையென்க.

கல்லால் நீழல்:— சாதனஞ் செய்யுங்காலத்தும் சிவானுபவம் கைவரப்பெற்று ஜீவன் முத்தராய் வாழுங்காலத்தும் மனத்திற்கும் சரீரத்திற்கும் விருப்பு வெறுப்பு முதலிய வெப்பந்தருகின்ற இராசத தாமதகுணங்களைச் சாராது சாந்தத்தைத் தரும் சத்துவகுணத்தைச் சார்ந்திருக்க வேண்டுமென்பதை உணர்த்துவது.

தென்முகம்:—அகோரமுகமாகும். அகோரமென்பது கோரமின்மையைக் குறித்து அனுக்கிரகத்தை உணர்த்துவது.

முடிவுரை.

தக்ஷிணாமூர்த்தியாய் கல்லால் நீழலின்கண் சிவபெருமான் எழுந்தருளியிருந்த திருமேனிப் பாங்கின் உண்மைப்பொருள் இதுவென உணர்த்துவதே இவ்வியாசத்தின் கருத்தென்பதூஉம், சின்முத்திரை அமர்ந்த திருக்கரம் எல்லாமாயும் அல்லதுமாயும் நிற்கும் தனது உண்மையிலையும், அம்முத்திரை மலநீக்கமும் சிவப்பேறுமாகிய பயனையும் உணர்த்துமென்பதூஉம், அமுதகும்பம் சிவஞானத்தையும், உருத்திராக்க மணிவடம் திருவைந்தெழுத்துக் கணிக்கவேண்டுமென்பதையும், முயலகனை மிதித்த திருவடியும் வீராசனமாய் அமர்ந்திருக்குந் திருவடியும் சீவன் முத்தர் இயல்பையும் குறிக்கு மென்பதூஉம், சிவஞானபோதம் மூன்று திருக்கரங்களினாலும் இரண்டு திருவடியினாலும் உணர்த்திய பொருளை விளக்குமென்பதூஉம், கல்லால் நீழலும் தென்முகமும், சாந்தத்திற்குச் சாதனத்தையும் அனுக்கிரகத்தையும் உணர்த்துமென்பதூஉம் பிறவுமாம்.

பொ. முத்தையபிள்ளை,
ஆத்துக்குடி.

தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

(240 - வது பக்கத் தொடர்ச்சி.)

ஆதிவாரத்தில் இந்த மலையை வலஞ்செய்பவர்கள் சூரியமண்டலத்தைப் பிளந்து சிவபதத்தைத் தமக்கு இடமாகச் சேர்த்துக் கொள்வார்கள்.

சோமவாரத்தில் வலம் வந்தவர்கள் தேவேந்திரனைப்போல ஏழுலகத்தையும் ஆண்டு சிவசாரூப்பியத்தை அடைவார்கள்.

மங்கலவாரத்தில் வலஞ்செய்பவர்கள் தங்கள் கடனையும் தரித்திரத்தையும் சங்கிலித்தொடர்போல் வருகின்ற எழுபிறப்பையும் நீக்குவார்கள்.

புதவாரத்தில் பிரதட்சிணஞ் செய்வோர்கள் நாலுவேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும் அறுபத்துநான்கு கலைகளையும் தெளிந்து தேவர்களாய் பின் முத்தியை அடைவார்கள்.

குருவாரத்தில் வலம் வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கு மேலாவார்கள்.

சுக்ரவாரத்தில் வலஞ்செய்தவர்கள் விஷ்ணுபதத்திற் சேர்வார்கள்.

சனிவாரவுதயத்தில் வலம்வந்தவர்களுக்கு நவக்கிரகங்களும் பதினோராமிடத்தின் நற்பலனைக் கொடுக்கும். சிவகிரியிலும் வருஷப்பிறப்பிலும் ஐப்பசிமுதலாகிய மூன்று மாதங்களிலும் வலம் வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகமான பலன் சித்திக்கும்.

உருவந்தெரியாமல் சித்தரும் தேவரும் இத்திருமலையைவலஞ் செய்வதால் மற்றவர்கள் கிரிப்பிரதட்சிணஞ் செய்யும்போது, வாகனத்தின்மேலேறிக்கொண்டு வராமலும், போர்வை போர்த்துக் கொள்ளாமலும், குடைபிடித்துக்கொள்ளாமலும், தாம்பூலம் தரிக்காமலும், வேறொருசிந்தனையில்லாமலும், மனத்தினால் வந்தனஞ் செய்து அருணாசலேசுரரையே சிந்தித்துக்கொண்டு மிகுந்த பயபக்தியுள்ளவர்களாய் நடைகொள்ள வேண்டுமென்றும், அந்தநாளில் விரதமிருந்து சிவதரிசனஞ் செய்து ஆலயத்திற் போகின்றவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதிசைவாசாரியர்களைக்கொண்டு வில்வார்ச்சனை முதலியவைகளைச் செய்வித்தால் தங்கள் கையினாற் செய்த பேறுகிடைக்குமென்றும் பிரமதேவர் சனகரிஷிக்குச் சொன்னார்.

சர்வாலய
தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

ஸ்ரீகைலாயத்தில் உலகமாதாவாகிய பார்வதியாரோடு சிவ பெருமான் எழுந்தருளியிருக்கும்போது அவ்விடத்தில் ஏற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஒருதீபம் அணைந்துபோகின்ற தருணத்தில் ஒரு எலியானது அதிலிருந்த நெய்யை உண்ணப்போனபோது அவ்வெலியின் முகமானது அணைந்துபோகிற வர்த்தியைத் தூண்டியமாத்திரத்தில் பிரகாசம் அதிகப்பட்டது. அதற்குச் சிவபெருமான் கிருபைகூர்ந்து அவ்வெலியானது மாபலிச்சக்கிரவர்த்தியாயிருந்து பூமியில் பிறந்து சகல ஐசுவரியத்தையும் அநுபவித்திருக்கவருள்சுரந்தனர். அச்சக்கிரவர்த்தியார் ஒருநாள் சிவதரிசனத்துக்குப்போக எத்தனித்துத் தன் இராசசின்னமுதலிய சகல ஆடம்பர விபவத்துடன் சிவாலயத்திற்குட் பிரவேசித்துப் பிரதக்ஷிணம் வருகையில் அவ்விடத்தில் ஏற்றியிருந்த தீபநெய்யின் ஒரு துளி அவர் தேகத்தில் அவருக்கும் தெரியாமல் ஒழுகினது. அதனால் அந்தச் சக்ரவர்த்தியின் தேகமுழுமையும் இரணங்கண்டு வெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண் டிருக்கும்போது ஒருநாள் சிவபெருமான் கிருபைகூர்ந்து சக்ரவர்த்தியே நீ அகங்காரியாகையால் இத்தீங்கு நம்மாலுனக்குண்டாயிற்று. நீ இன்றுமுதல் நெய் முதலிய பொருள்களால் ஆலயங்களுக்குத் தீபமேற்றுவையானால் இந்த விரணந்தீர்ந்து சாயுச்சியபதங்கிடைக்குமென்று அசரீரியாய்த் திருவுளம் பற்றியதைக் கேள்வியுற்ற சக்ரவர்த்தி ஆனந்தமடைந்து அந்தக்கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலும் மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களிலும் தீபம் ஏற்றிக்கொண்டு வருங்காலங்களில் ஒருநாள் ஸ்ரீகைலாயபதியாகிய சிவபெருமான் திருவுளமிரங்கிக் கார்த்திகைமாதம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தேசோமயமா யெழுந்தருளி அச்சக்கிரவர்த்திக்குச் சாயுச்சிய பதமளித்தருளினர்.

அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லாம் அந்தச் சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உஷ்ணந் தணியும் பொருட்டுப் பொரியவல் நிவேதனம் பண்ணினார்கள். இவ்வாறு கைலாயபதியாகிய சிவபெருமான் மாபலிச்சக்ரவர்த்திக்குச் சோதிசொரூபமாகத் தரிசனங் கொடுத்த காரணமாகச் சிவாலயங்கடோறும் கார்த்திகைமாசம் பூர்வபக்ஷம்

கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம்வைக்கவும் சுட்கப்பனை (சொக்க பானை) கட்டவும் ஆயின.

கார்த்திகை நக்ஷத்திரத்துக்கு முன்னுள் பரணி நக்ஷத்திரஞ் சாயங்காலை அதிவாசதீபத்தில் அக்கினிகாரிய முதலியவைகளின் மூலமாய் மகாலிங்கமூர்த்தியை ஆவாகனம்பண்ணி அந்தத்தீபத்தைச் சுவாமி சந்நிதானத்திற்முனே பூசித்துவைக்கவேண்டும்.

மற்றைய நாள் சாயங்காலை அர்த்த சூரியமண்டலத்தில் தென்னைமரம், பனைமரம், பாக்குமரம், வாழைமரம், மூங்கில் என்னும் இம்மரங்களில் ஒருவித மரத்தை ஆலயத்திற்கும், இந்திரதிக்குக்கும் மத்தியஸ்தானமாகிய பிரமஸ்தானத்தில் நாட்டவேண்டும். இந்தமரத்துக்குத் தீபதண்டமென்று பெயராம். தண்டவுன்னதப் பிரமாணம், சுவாமி கர்ப்பகிருகத்து விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது விமானம் கழுத்தினளவாவது இருக்க வேண்டும். இவ்விதமான தீபதண்டத்துடன் உலர்ந்த தென்னோலையாவது பனையோலையாவது பாக்கோலையாவது வாழைச்சருகாவது தாழஞ்சருகாவது அசோகச்சருகாவது விமானம்போல் கட்ட வேண்டும்.

மேற்சொன்ன பரணி நக்ஷத்திர மறுநாளாகிய கார்த்திகை நக்ஷத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதராய் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப் பண்ணி, ஷை தீபம் சுவாமிக்கு முன்னே வரும்படியாகச்செய்து தீபதண்டத்தைச் சமஸ்காரப்படுத்திக்கொண்டு அத்தீபத்தை அத்தண்டத்தின்மேல் வைத்து சருகுகளைக் கொளுத்திவிட்டு அந்தச் சருகுகள் எரிந்தபின்பு ஷை தண்டத்தைச் சேதித்துவிடவேண்டும். அச்சோதியை சிவபெருமானுகப் பாவனைசெய்து தரிசிப்பவர்களுக்கு இம்மையில் செல்வமும் மறுமையில் மோக்ஷமுங் கிடைக்குமென்று ஆகமங்கள் சொல்லுகின்றன.

தண்டவிதி.

உத்தமம் தென்னமரம், மத்திமம் பனைமரம், அதமம் பாக்குமரம், அதமாதமம் வாழையும் மூங்கிலும்.

தண்டவுன்னதப்பிரமாணம்.

உத்தமம் விமானத்தளவு, மத்திமம அதன்கழுத்தளவு.

மலையைச்சேர்ந்த ஸ்தலங்களில் நக்ஷத்திரம் பிரதானமாகவும், சமுத்திரத்தைச் சேர்ந்த ஸ்தலங்களில் பௌர்ணிமை திதி பிரதானமாகவும் தீபம் வைக்கவேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன.

அண்ணாமலையனை, உண்ணாமுலையொடு, பண்ணாற்பழிச்சிடில், நண்ணாவினைகளே.

இந்த அருணாசலத்தின் மான்மியத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் எழுதினவர்களும் எழுதிவைத்துக்கொண்டவர்களும் அதை பூசித்தவர்களும் கரியகடல் சூழ்ந்த பூமி முழுதுங் காத்துத் தருந்த புத்திரசம்பத்தும் போக சவுக்கியமும் தழைபெற வாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணாசலேசுரர் கிருபையினாலே அவர் திருவருளுக்குப் பாத்திரராவார்கள்.

மோசூர் - முனிசாமிமுதலியார்.

ஆதிசைவகுல மான்மியம்.

(231-வது பக்கத்தொடர்ச்சி.)

இனிச் சில தூர்க்குணிகளாகிய அப்பிராமணர்கள் உத்தமோத்தம சிவப்பிராமணர்களை பிராமணனுக்குப் பிராமண கன்னிகையிடத்துப் பிறந்த கானீனரென்றும், மகாதேவ பூஜைக்காக சமந்திரகமாக உபநயனஞ்செய்யப் பெற்றுச் சிவாகமமாத்திரம் படிக்கத்தக்கவர்களென்றும், இதற்குப் பிரமாணம், சிலநாள்முன் ஒரு பிராமணரா லெழுதப்பட்ட வைத்தியநாதமென்றுங் கூறுகின்றார்கள். ஷை நூலுக்கு வியாக்கியானஞ் செய்தவர், இதற்குப் பிரமாணம் சாதிநிர்ணயமென்னும் நூலென்றும் அது எங்கேனு மிருக்கலாமென்றுங் கூறுகின்றார். இந்த உழறுபடையை விரிப்பானேன். பரமேசுரவாக்காகிய வேதசிவாகமங்கள், அவற்றின் வழிவந்த புராணேதிகாசங்கள் முதலிய புராதன சிவசாஸ்திரங்களை நோக்க, நூதன வைத்தியநாதம் எம்மாத்திரமாகும். அன்றியும் குணாதீத பரமேசுரவாக்காகிய சிவாகமங்கள், சதாசிவ முகோற்பனர்கள் உத்தமோத்தம சிவப்பிராமணர்களென்று கூறுகின்ற ஆப்தவாக்கியங்களைத் திரிகுணவசப்பட்டுச் சில்வாழ்நாட்பல்பிணிச் சிற்றறிவினராய சீவர்களில் ஒருவர், சிலநாள் முன் எழுதிய வைத்தியநாதமா மறுத்துத் தன்கொள்கையை நிலைநிறுத்தும்? இதை இன்னும் விரிப்பதனாவசியம். அமைக,

வசிஷ்டாதி மகரிஷிகள் பலர், வேசி வலைச்சி புலைச்சி மண்டூகம் சுவானம் கார்த்தபம் முதலிய இழிந்த தானங்களிற் பிறந்தவர்களென்று வேதோபநிஷத புராணாதிகள் கூறுவதுண்மையாயிருக்கவும், அப்பிராமணர்கள் தங்களைக் கானீனர்களென்று பொய்கூறுவது தெரிந்திருக்கவும், அவர்களைச் சிவப்பிராமணர்கள் இழித்துக்

கூறுகின்றார்களா? ஏன் அப்பிராமணர்கள் வீண்வம்புகூறவேண்டும். சண்டிக்கானீனரென்று கூறிய பொய்யை வீண்வம்பென்று மறுத்தற்கு உரைத்ததன்றி வசிஷ்டாதிகள் தோற்றத்தின் இழிவு கூற வந்ததன்று. வசிஷ்டாதியர்கள் தோன்றிய ஸ்தானங்கள் இழிந்தனவாயினும் பீஜத்தாலும் ஞானமுதலிய குணங்களாலும் அவர்கள் உயர்ந்தவர்களே யென்ப துலகெலாமுணர்ந்த வுண்மையே.

இனித், தேவர்களுள்ளே பரமசிவனே பிராமணன்; விஷ்ணு க்ஷத்திரியன்; பிரமா வைசியன்; இந்திரன் சூத்திரனென்று வேதமும் மற்றும் வழிநூல்களுங் கூறுகின்றன. அது அவ்வேத முதலிய நூலுணர்ந்தார் யாவருக்குந் தெரிந்த விஷயம்; இம்முறையாலும் தேவச்சாதியில் வைசியச்சாதியினராகிய பிரமாமுகத்திற்றோன்றிய பிராமணர்களைக்காட்டிலும், பிராமணச் சாதியினராகிய சதாசிவ முகத்திற்றோன்றிய சிவப் பிராமணர்கள் மிக மேன்மையுள்ளவர்களென்பது பரிஷ்காரமாக விளக்கமாகும். இனி, அப்பிராமணர்கள், சிவப்பிராமணர்களிற் சிலரிடத்துக் கல்வியறிவொழுக்கங்களின்மைகுறித்து அக்குலத்தை இகழ்கின்றார்கள். இஃதென்ன புத்தியோ? அங்ஙனம் இகழ்கின்ற பிராமணர்களிற் கல்வி யறிவொழுக்கங்க ளில்லாதவர்களில்லையா? எண்ணமுடியாதே. அதற்காக அக்குலம் இழிந்ததென்றெவராவது கூறமுடியுமா? நல்லது; எந்த உலகத்தில் எந்தத் தேசத்தில் எந்த ஊரில் எந்தச் சாதியில் எல்லாரும் அறிவாளிகளாயிருப்பார்கள்? சிலர் பலர் அறிவில்லாதவர்களாயிருந்தால் அதற்காக அந்தச் சாதி அதற்குள்ள தன்மையிற் குறைவுபடுமா? இதனைப் புத்திமான்கள் ஊகித்துண்மை கூறுவாராக.

காவிரிப்பூம் பட்டினத்துள்ள காலந்தொடுத்தே, சிறிதும் மாறுபடாமற் சிவாகம வழியாகவே ஸ்ரீ பஞ்சாக்ஷரோபதேச சிவதீக்ஷாதிகள் சிவாலய கைங்கரியாதிகள் மேற்கொண்டு ஒன்பது சிவாலயங்களுக்கே கொத்தடிமைகளாய்ப் பரம்பரைச் சுத்தசைவ குலத்தினராய் வாழுகின்ற தனவைசிய நகரத்தார்கள், தங்களுக்கு வேதத்தைக்காட்டிலும் முக்கியமாகிய சிவாகமங்கட்கு விரோதிகளாகிய அப்பிராமணர்கள் கூறுஞ் சிவாகமாபகர்ஷ விரோதங்களுக்குச் செவிகொடார்கள். ஒருவாறு சிலர் கேட்டாலும் அங்ஙனம் கேட்பவர்களும் தாந்தாம் மேற்கொண்ட சிவாலயாதிகளில் சிவப்பிராமணர்களாகிய குருக்கள்மார் வழியாகவே நடத்திவருகின்றார்

களன்றி வேறில்லை. உலகத்திலே எத்தனையோ சாதியாருக்குக் குருக்கள்வகை அனேகமிருந்தாலும், இச்சிவப் பிராமணர்க்கே குருக்கள் என்றசொல் நிருபபதமாக யோகரூடியாய் லோகப்பிரசித்தமாய் விளங்குகின்ற மேன்மையும் இவர்கள் மகிமையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கும்.

பிரமா முகோற்பந்ந ரிஷிவம்சத்தவர்களாகிய பிராம்மணர்கள், தங்களுக்குமேல் நான்குபடி யுயர்ந்த சதாசிவ முகோற்பந்ந மகரிஷி வம்சத்தவர்களாகிய சிவப்பிராமணர்களையும், சிவாகமாதிகளையும், நிந்தித்தற்குக் காரணத்தை, எங்கே புகையுண்டோ அங்கே நெருப்புண்டென்று அனுமானித்தல்போல,

“நலத்தின்கணாரின்மை தோன்றினவனைக் குலத்தின்கணையப்படும்”

என்று முன்னர் அனுமானப் பிரமாணத்தாற் காட்டிய மாத்திரமன்றி ஈண்டுச் சுருதிப்பிரமாணமுங் காட்டப்படும்.

இத்யுக்தாவதத்விஜாந் வீக்ஷ்ய யக்ஞவாடமுபாகதாந்

* * * * *

என்ற சங்கரசங்கிதை தக்ஷகாண்டம் ௨௯-வது அத்தியாயம் ௨௫, ௨௬-வது சுலோகங்களாற் காண்க.

இது, தக்கன்யாகத்திற்சென்ற ததீசிமுனிவர், அவனுக்குச் சிவபரத்துவத்தை யதிவிஸ்தாரமாகக் கூறிப் பின்பு, அத்தக்கன் சிவநிந்தகனென்பதும், அவன் கொடுக்கும் அன்னத்தைப் புசித்தாற் சிவத்துரோகமே விளையுமென்பதும், ஒரு சிறிதும் நோக்காது, அதிவிசேஷ போசனப் பிரியர்களாய் அங்கு வந்திருந்த பிராமணர்களை நோக்கிக் கூறியது. இதன் பொருள், அப்பிராமணர்களைப் பார்த்துச் சிவநிந்தகனாகிய இத்தக்கன் யாகசாலையில் வந்திருத்தலாற் பிராமண அதமர்களாகிய நீங்களெல்லாரும், வேத சிவாகம விரோதமான குசாஸ்திரப் பிரியர்களாய், நித்திய சிவத்துரோகிகளாய், வைதிக சைவமார்க்க சிவபூஜாதிகளிற் பராமுகர்களாய், சிவபக்தநிந்தகர்களாய், எல்லா நரகங்களிலும் விழுந்து பெருந்துக்கமடையக் கடவீர்களென்பதாம்.

இதன் தாத்பரியம் தமிழில்,

பேசரிய மறைகளெலாம் பராபரனீ யெனவணங்கிப் பெரிதும்போற்றும்
ஈசனையு மன்பரையு நீற்றொடுகண் டிகையினையு மிகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவரா யெந்நாளும் பிறந்திறந்து கதியுறாது
பாசமதனிடைப் பட்டு மறையுரையா நெறியதனிற் படுதிரென்றான்.

என்ற கந்தபுராணம் தக்ஷகாண்டம் அநந்தன் சாபநீங்கு படலம் ௩௨-வது திருவிருத்தத்தால் விளக்கப்பெற்றது. இதன் பொருள்,

வேதசிவாகமாதி சாஸ்திரங்களெல்லாம் சுத்தமாயாதீத பரம் பொருள் நீயேயென்று பன்முறையும் பணிந்து துதிக்கின்ற பரமேசுரனையும், அவனடியார்களையும், விபூதி ருத்திராக்ஷ பஞ்சாக்ஷர சிவசாதனங்களையும், நிந்தித்து நீங்களெல்லாரும் இப்பூமியிற் பிராமணர்களா யெப்போதும் பிறந்திறந்து நற்கதி பெறாதுழன்று, பாசபந்தப்பட்டு வைதிக சைவ விரோதமார்க்க மேற்கொண்டு நீங்கா நரகிற்கிடந் துழலக் கடவீரென்றான் என்பதாம்.

ஆனால், இச்சுலோகத்திலும் திருவிருத்தத்திலும் மேற்கூறிய பிராமணர்கள் சிவாகமங்களையும், சிவத்துவிசர்களையும், நிந்தித்தற்குக் காரணம் காணப்படவில்லையே யென்றால், இத் திருவிருத்தத்தில் ஈசனை யென்றதனால் ஈசனாற் கூறப்பெற்ற சிவாகம நிந்தனையும், அன்பரையு மென்றதனால் சிவனன்பர்களாகிய சிவத்துவிசர்கள் நிந்தனையுமுள்ளவர்களென்பது விளக்கமாகும். இனி, குசாஸ்த்ராசக்தமாநசா: என்ற குறிப்பும் சுசாஸ்திரமாகிய சிவாகம நிந்தகர்களென்பதையும் அதனை மேற்கொண்ட சிவப்பிராமண நிந்தகர்களென்பதையும் விளக்கும். இதனால் பிரமாமுகோற்பந்நராகிய அப்பிராமணர்கள் தம்மில் நான்குபடி யுயர்ந்த சதாசிவ முகோற்பந்ந சிவப்பிராமணர்களையும் சிவாகமாதிகளையும் நிந்தித்தற்குக் காரணம், ததீசி மகரிஷியின்சாபமேயென்பது தெளிவாயது. சாபம் இஃதொன்றுமட்டோ? கௌதம மகரிஷியும், அப்பிராமணர்கள் துற்புத்தியாற் செய்த வஞ்சனைநோக்கிச் சபித்திருக்கின்றனர். அதாவது

புராதாருவநேபுண்ணியே முநயோஸிரஹமேதிந:

*   *   *   *

இ-ள். முன்னோர்காலத்தில் தாருவனத்தில் கிருகஸ்தர்களாகிய முனிவரனேகர் சிவாராதனையின் பொருட்டுத் தவஞ்செய்து வந்தார்கள். அப்போது காலபேதத்தினால், பெரியதும், கடத்தற்கரியதும், உயிர்களை வருத்தக்கூடியதுமான துற்பிக்ஷம் (பஞ்சம்) வந்தது. அப்போது அம்முனிவரெல்லாம் பசியினால் வருந்தித் தபோநிதியாகிய கௌதம முனிவரை யடைந்து பிராணாதாரமாகிய அன்னம் வேண்டுமென்று யாசித்தார்கள். அவர்களுக்குச் சந்தோஷத்துடன் மிகுதியாக அன்னமளித்து ரக்ஷித்தனரென்பதாம்.

இவ்விதம் கௌதமர் அன்னமளித்து ரக்ஷித்துவருங்கால், அப்பிராமணர்கள் யாதொரு கவலையுமின்றி அப்புண்ணிய முனிவரது ஆச்சிரமத்தில் பன்னிரண்டு வருடம் சுகமாக வாழ்ந்துவந்தனர். பின்பு பஞ்சம் நீங்கி நாடெல்லாஞ் செழித்தமையால் அப்பிராமணர்கள், அவ்விடம் விட்டுத் தமது உறைவிடஞ்செல்ல நினைந்து கௌதமரிடம் அனுமதிகேட்க, அவர்மேலுஞ் சிலகாலந் தமது ஆச்சிரமத்தில் சுகமாக வுண்டு வாழும்படி கூறித் தடுத்தனர். அப்போது, அப்பிராமணர்கள் தங்கள் மந்திரபலத்தால் மாயாரூபமாக ஒரு கரிய பசுவை யுண்டாக்கிக் கௌதமர் சமீபத்தில் நிற்கச்செய்ய, அக்கௌதமர் அப்பசுவைப் பிடித்துக் கொண்டுவந்து தமது கோட்டத்திற் கட்டித் தொட்டமாத்திரத்தில் அதுவீழ்ந்திறந்தது. உடனே கௌதம முனிவர் கோஹத்தி வந்துவிட்டதே யென்று பரிதபித்து வருந்தினர். அப்போது அப்பிராமணர்கள், கௌதமரை நோக்கி,

கோவத்யேயம் த்விஜச்ரேஷ்ட யாவத்தவ சரீரகா

* * * *

"பிராமண சிரேஷ்டராகிய கௌதமரே? இதுவோ பசுக்கொலையாயிற்று, உமது சரீரம் நீங்கும்வரையும் உமது அன்னம் புசிக்கற்பாலதன்று, நாங்கள் இவ்விடம் விட்டுப் போகின்றோம்." என்று கூறிவிட்டுத் தாருவனத்தை யடைந்தார்கள். அவர்கள் மாயத்தினாற் செய்ததை யறிந்து கௌதமர் சபித்தார். அதாவது.

பவிஷ்யந்தி த்ரயீபாஹ்யா மகா பாதகிபிஸ்ஸமா:

* * * *

இவ்வாறு மாயஞ்செய்த பிராமணர்கள் மகா பாதகர்களுக்குச் சமானர்களாகி வேதபாஹ்யர்களாகக் கடவர்களென்று சபிக்க, அப்பிராமணர்கள் அச்சாபத்தை யேற்று, மீட்டும் மீட்டும் பிறந்துழன்று வருந்தி, உருத்திரரையும், விஷ்ணுமூர்த்தியையும், அடைந்து துதித்தார்கள். அத்துதிக்கிரங்கிய ருத்திரமூர்த்தியும் விஷ்ணுமூர்த்தியும் அப்பிராமணர்கள் சாபமேற்ற தூர்க்கதிக்கிணங்க அவைதிகங்களாகிய பாசுபதம், காபாலம், லாகுளம், சாக்தம், வைரவம், காளாமுகம், பாஞ்சராத்திர முதலிய அசிரவுதாகமங்களை உண்டுபண்ணிக் கொடுத்து அவ்வழி யொழுகச் செய்தார்கள். இச்சரித்திரம் கூர்மபுராணம் பூர்வபாகம் பதினாறு மத்தியாயத்தும், சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம் முப்பத்திரண்டா மத்தியாயத்தும் விளங்குகின்றது. ஈண்டுக்கூறிய ததீசி கௌதம மகரிஷிகள் சாபமாத்திரமோ, இன்னும் திருநந்திதேவர், பிரமதேவர், துர்வாசர், பிருகுமுனிவர் கண்ணுவமுனிவர் முதலியோர் சாபங்களும் அப்பிராமணர்களுக்குள்ளன, இதனை,

இட்டர்புகழ் கைலைமலை காத்தருளுந் திருநந்தி தேவன் செங்கேழ்
மட்டுறுபங் கயத்துறையு நான்முகத்தோன் றிருவாசன் மறைநூல்யாவும்
தட்டறவே யுணர்பிருகு கௌதமன்கண் ணுவமுனிவன் றதீசி யின்னோர்
இட்டபெருஞ் சாபமெலாம் பொய்த்திடுமோ வெனவுன்னியேகலுற்றான்.

என்னுந் திருவிருத்தத்தாற் காண்க. இது, அகஸ்தியமுனிவர் விபூதி ருத்திராக்ஷ தாரணராய் சிவநாமோச்சாரணராய்த் திருக்குற்றாலத்தினுட்புகும்பொழுது அங்குள்ள வைஷ்ணவப் பிராமணர்கள், முனிவரது சிவவேஷத்தைக் கண்டதும் சிவநாமங்களைக் கேட்டதும் தங்களுக்குப் பாதகமென்றெண்ணி, அவரை இன்னும் பார்க்கப்படாதென்று விஷ்ணுவாலயத்தின் வழிவரவொட்டாது தடுத்தபொழுது, அதனைச் சிவாலயமாக்கத் திருவுளங்கொண்டமையால், சர்வசக்திமானாகிய பரமேசுர சமானராயிருந்தும் அத்தடைக்கு உட்பட்டவர்போலத் திரும்பிச் செல்லும்பொழுது, அவ்வைஷ்ணவர் முதலிய பிராமணர்கள் இவ்விதமான சிவநிந்தகர்களாகும்படி முன்னமே பல மகரிஷிகளாற் சாபமேற்றிருத்தலை விளக்கிக் கூறிய கந்தபுராணம் அசுர காண்டம், திருக்குற்றாலப் படலத்தில் அ-வது திருவிருத்தம்.

(இன்னும் வரும்.)

ஆர்ச்சாதீபம்.

(237-வது பக்கத்தொடர்ச்சி.)

௫-வது காட்டிய வசனங்களில் கண்-வாக்கு-மனம் இவைகளுக்குப் பிரஹ்மம் எட்டாது என்று கூறுவது திரிகரணங்களுக்கும் எட்டாது என்றபடியாம். மனம்-வாக்கு-காயம் என்பவே அவை. ஈண்டுக் காயத்தையே கண்ணென்றுரைத்தது. இப்படிக் கன்றி ஸ்தூலப் பார்வையிற்கொண்டு கூறினுங் குறையில்லை. நேத்திரேந்திரியம்-வாக்கிந்திரியம்-மனம் என்பனவாய அந்தக்கரணங்கள் ஜடங்களானமையால் இவைகள் பிரஹ்மத்தை அறியமாட்டா. ஆகையால், ௬-து வசனங்களில் எது வாக்கினாலும், மனதினாலும், கண்ணினாலும், காதினாலும், மூக்கினாலும் விளங்குகிறதில்லையோ; எது வாக்கையும், மனத்தையும், கண்ணையும், காதையும், மூக்கையும், விளங்கச்செய்கின்றதோ அதுவே பிரஹ்மம் என்று விளக்கினமை

யும் எமது பட்சத்தையே சாதித்தது. ஜடத்துக்கு இயங்குந் தன்மையின்மையும், சித்துக்கு இயங்குந் தன்மை, வேறொன்றை இயக்குந் தன்மைகளுண்மையும் ஸித்தமாகையால், வாக்கு முதலியவைகளால் பிரஹ்மம் விளங்குகிறதில்லையெனவும், பிரஹ்மத்தால் வாக்கு முதலியவைகள் விளங்குகின்றனவெனவும் உபநிஷதர்த்தங்கள் வியக்தமாயின. இந்த அர்த்தத்தையே (உள்ளத்துணர்ச்சியிற்கொள்ளவும்படாஅன்-கண்முதற்புலனாற் காட்சியுமில்லோன்) எனவும், (சித்தமுஞ்செல்லாச் சேட்சியன்காண்க) எனவும், (மறையினாலயனான் மாலான் மனத்தினால் வாக்கன்மற்றுங் - குறைவிலாவளவினாலுங் கூறொணாதாகி நின்ற-விறைவனார் கமலபாதம்) எனவுஞ் சைவாசாரியர்கள் கூறியிருக்கின்றனர். ஷை வசனங்களைப் பூர்வபக்ஷிகள் எடுத்து ஆளுகின்றாரே தவிர அவைகள் தமது சித்தாந்தத்துக்கு உபயோகமா, அநுபயோகமா என்றதை யோசிக்கிறதில்லை. எங்ஙனமெனின், வாக்கு முதலியவைகளையும், பிரஹ்மத்தையுமே அவர் காட்டிய வசனங்கள் தெரிவித்தமையால், பிரஹ்மமே வாக்கு முதலியவைகளோடு ஸம்பந்தித்து அந்த வாக்கு முதலியவைகளை விளங்கச்செய்கின்றது என்று ஏற்படுகின்றது. அதனால், வாக்கு முதலிய வியஷ்டிகளாலமைந்த ஸமஷ்டி சரீரத்தில் சரீரியாயிருந்து நடித்தும், நடிப்பித்தும் இயங்குஞ் சீவனையே பிரஹ்மம் என்று கொண்ட மதமாக அவர் மதம் வெளிப்படும். சீவனையே பிரஹ்மம் என்றுகொள்ளுவது அவர் கோளல்லாமையால், அவர் காட்டும் வசனங்கள் அவரை மயக்கியே வெளியாகின்றன. பிரஹ்மமானது சரீரமாகிய ஜடத்தையும், ஜீவனாகிய கிஞ்சிஜ்ஞனையும் இயக்குந்தன்மையின தொன்றாகையால், ஷை வசனங்கள் ஜடங்களை இயக்குந்தன்மையை விளக்கவந்தன. ஆண்டு ஸத்தும் அஸத்துங் கூறப்பட்டமையால், பாரிசேட நியாயத்தால் ஸதஸத்தென்பது கூறாமே யமையும். ஸதஸத்தே ஜீவனென்றறிக. இந்த வியவஸ்தையால், ஸதஸத்தாகிய ஜீவனுக்கு அஸத்தாகிய கருவிகரணங்களைக்கூட்டி ஸத்தாகிய பிரஹ்மம் உபகரிக்கின்றமையே வியக்தமாயிற்று. ஸதஸத்தும், அசத்துங் கூடியபோதே ஸதஸத்துக்கு ஞானக்கிரியைகளும், அஸத்துக்குக் கேவலங்கிரியையும் வெளிப்படலாலும், ஸதஸத்தினது ஞானம் தடைபட்டிருப்பதனாலும், அஸத்தாகிய கருவிகள் அறிவற்றிருப்பனவாகலானும், சுத்த வறிவாகிய சிவம் இவற்றைக் கூட்டி யுபகரித்தல் சாலும். சிவம் (உலகெலா மாகிவேறா யுடனுமாய்) என்னு நிலைமையினதாய் உலகுயிர்களை நடத்து முறைமை காண்க.

இங்ஙனமிற்க, ஷை வசனங்களில் (எதை இது என்று உபாசிக்கிறார்களோ அது பிரஹ்மமல்ல) என்று ஒவ்வோரிந்திரிய பிரஸ்தாபங்களிலும் பெறப்பட்டமையால், இது - இது - இது-இது - இது என்று முறையே வாக்கினாலும், மனதினாலும், கண்ணினாலும், காதினாலும், மூக்கினாலுஞ் சுட்டப்பட்ட பொருள் பிரஹ்மமாகமாட்டாதென்று கூறுவதும் ஸாமஞ்சஸமேயாகும். பிரஹ்மமானது சுத்தவறிவாகையால்; அது ஆத்மாவினது அறிவுக்குமாத்திரமே விஷயமாகும், ஆத்மாவினது அறிவு தடை நீங்கியபோது தானே அது சிறக்கும். அதற்குத் தடையுள்ளபோது தானே கருவிகரணங்கள் சேர்க்கப்படுதலால் அது தனிக்கவாவது, சேர்ந்த கருவிகளைக் கொண்டு பிரஹ்மத்தை அறியவாவது கூடாது. கருவிகரணங்களும், அவற்றோடு கூடியுள்ள ஆத்மாவுங் கண்டப்பொருள்களாகையாலும் அகண்டமாகிய சிவத்தைச் சுட்டியறிந்து அநுபவிக்கமுடியாது. அகண்டமாகிய சிவத்தைக் கருவிகரணங்களோய்ந்தவிடத்தில் ஆத்மா சுட்டற்ற நிலையிலிருந்து அநுபவியாநிற்கும் ஆகையால், பிரஹ்மம் இது என்னுஞ் சுட்டுக்கு விஷயமாகாதது என்று கூறுவது சைவநலமாகவே முடிந்தது. (இதுவென்றதெல்லாம் பொய்யென்றான்) என்று மேலோர் கூறிய அமுதவுரையுஞ் சான்றாம். சிவம் ஆத்மாவில் வேறற நின்றநுபவவேத்யமாகுங்கால், ஞாத்ரு-ஞான - ஞேயங்கள் கேட்கப்படாமையாலும், அதனைத் திரிபுடிரஹிதம் என்று வேதங்கள் கூறுகின்றமையாலும், அந்நிலை இதுவென்று சுட்டும் யோக்யதையைப் பெறலின்மையாலும் இதுவென்று சுட்டி யுபாசிப்பது பிரஹ்மமாகாது என்று கூறுவது ஸர்வஸம்பிரதிபந்நமாயிற்று.

இப்படி விசாரிப்பதொழிந்து இதுவென்றுசுட்டி யுபாசித்தல் கூடாதென்பதனை அர்ச்சாபிம்பங்களைக் கூறியதாகக் கொண்டிருக்கும் பூர்வபட்சிகள் பின்விஷயங்களைச் சற்றே யோசிக்கட்டும். மேல் வசனங்கள் பிரஹ்மமானது கண்ணுக்கு விஷயமாகாது என்றபடி மனதுக்கும் விஷயமாகாது என்று கூறினமையால், அந்தர்ப்பாஹ்யேந்திரியங்களெவற்றிற்கும் விஷயமாகாத அதனை நம்மவர் எவ்வாறு அறிந்து அநுபவிப்பார்கள்? கண்ணினாற் சுட்டி இதுவென்று உபாசிப்பதை மறுத்தபடியே மனதினாற் சுட்டி இதுவென்று உபாசிப்பதையுங் கண்டித்தலை யோசியாததென்னை? பிரஹ்மம் என்று மனசினால் நினைப்பதே அந்தப் பிரஹ்மத்தை உபாசித்தல் என்று கொண்ட அவர் மதமும் புன்மதமாக முடிந்தமையின், அவர் பிறிட

மேற்றுந் தூஷணம் அப்படியே குதித்துத் தம்மிடமுந் தாவியேறிக் கொள்வதில் என்னதடை? இதுவென்று சுட்டியறியாத தன்மை எல்லாக் கருவிகரணங்களு மோய்ந்தவிடத்தன்றி அமையாது. அதனால், மனம் நசியாதபோது சுட்டறிவு கெடாது. அது கெடாத போது இதுவென்று உபாசித்தல் கெடாது. ஆகவே, இது என்று உபாசித்தலை மறுத்த வசனங்கள் தமக்கு ஸாதகமாவதில்லை. மன சினால் பிரஹ்மம் ஒன்று உண்டென்று நினைப்பதும் இது என்று சுட்டுவதாக முடிதலின், நம்மவரது புது சித்தாந்தம் புண்பட்ட ழிந்தது. (ஸங்கல்பே பந்தஃ, சுசங்கல்பே பந்தஃ) என்ற தேத் யாதி உபநிஷத் வாக்கியங்களையும் அறிந்திடுக. இதனால், அர்ச்சா பிம்பங்களைத் தூஷிப்பதற்கே அந்த வசனங்கள் பிறந்தனவாக மயங்கி உதகரிப்பது தெரியாமையாக முடிந்தது.

(இன்னும் வரும்.)

ஆயுள் சந்தாவும்

அடுத்த வருடத்து ஜனவரிமாதப் பத்திரிகையும்.

உலகத்தில் சைவமுதலாக எண்ணிறந்த சமயங்கள் இருப்பி னும், அவையாவும் முற்காலத்தில் அனுட்டிக்கப்பட்டவாறு இக் காலத்திலும் அனுட்டிக்கப்படுவனவாயில்லை. இக்காலத்தில் அவை களை யனுட்டிப்போர் பெரும்பாலும் அகத்தில் நாத்திகரும் புறத் தில் ஆத்திகருமாயிருக்கின்றனர். சமயவொழுக்கங்கள் வெறும் சொல்லளவாகவும் வேடமாத்திரமுமா யிருக்கின்றன; அகமும் புறமும் ஒத்தனவாயில்லை. எங்கும் நல்லொழுக்கங்கள் குன்றி தீயொழுக்கங்களே நிரம்பி யிருக்கின்றன. இப்போது உலகடங்க லும் நிரம்பியிருக்கும் கொடிய நோய்களும், அகால்மரணங்களும், யுத்தங்களும், பஞ்சமும் மனிதர்களின் தீயொழுக்கங்களுக்கேற்பக் கடவுளாற் செய்யப்படும் தண்டனைகளே யன்றி வேறன்று. என் பிதாவின் விவாககாலத்தில் அரிசியின் விலை ரூபா ஒன்றுக்குப் பட் டணம் படி பதினாறாக இருந்ததாம். என் விவாககாலத்தில் அது எட்டு படியாயிருந்தது. என் குமாரன் விவாகத்தில் நாலு படியா யிற்று. இக்கிரமத்தின்படி என் பேரன் காலத்தில் இரண்டுபடி யாகும்போலும். இவ்வாறு உலகத்தில் நாளுக்கு நாள் ஒழுக்கம் குன்றி வருதற்கேற்ப தீமைகள் அதிகரித்து வருகின்றன.

திருமந்திரம்.

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற் றானே.

முன்னவனார் கோயில் பூசைகண் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
யென்னரு நந்தி யெடுத்துரைத் தானே.

இதனை யுணர்ந்து இனியேனும் உலகில் தீயொழுக்கங்கள் குன்றந்து நல்லொழுக்கங்கள் ஓங்குமாறு முயற்சி செய்வாருமில்லை. சமய உண்மைகளை உள்ளவாறுணர்ந்து அவ்வழியொழுகி, தம் ஒழுக்கத்தாற் பிறரைப் பின்பற்றச்செய்வாருமில்லை. எங்கும் வேடமே, எங்கும் வஞ்சகமே, எங்கும் பாதகமேயாயிருக்கிறது. பெரியார் சிறியார் என்னுஞ் வரம்பு நீங்கிப்போயிற்று. சமயாசாரமும் சாதியாசாரமும் தலைதடுமாறிவிட்டன. பதிபுண்ணியங்களைப் பரிபாலிப்பாரில்லை. இத்தன்மையான காலத்தில் நாம் ஒப்பற்ற சைவப் பயிரை வளர்க்க விரும்பி இப்பத்திரிகையை வெளியிட்டுவரத் தொடங்கினோம். தொடங்கியபோது இதற்கு வருடச்சந்தா அணா பன்னிரண்டாகவும், ஆயுள்சந்தா ரூபா பத்தாகவும் நிருணயிக்கப் பட்டன. பிறகு காகிதம் முதலிய எல்லாப்பொருள்களும் பன் மடங்கு விலையேறிவிட்டன. விலையேறியும் சைவப் பயிரை வளர்த் தலின்கண் வைத்த ஆர்வமிகுதியால் எவ்வித இடையூறுகளையும் பொருட்படுத்தாமல், யாசகம் செய்தும், இப்பத்திரிகையை மாத மாதம் தவறாமல் வெளியிட்டுவருவதோடு, பதினாறு பக்கங்களோடு வெளியிட்டதை இருபத்து நான்கு பக்கங்களோடு வெளியிட்டு வருகிறோம். இருபத்து நான்கு பக்கங்களாக வெளியிடத் தொடங்கியும், முதலில் நிர்ணயித்த சந்தாத் தொகையை உயர்த்த மனமின்றியே சென்றவருட முடிவு வரையில் 12 அணாவுக்கே பத்திரிகைகளையனுப்பினோம். பின், மேலுமேலும் காகிதவிலை அளவுகடந்தேறிவிட்டது. அதனால் பன்னிரண்டணாவாக இருந்ததை ஒரு ரூபாவாக்கினோம். ஒரு ரூபாவாக்கியும் இப்போது இப்பத்திரி

கையின் பொருட்டு வருடம் ஒன்றுக்கு வரவுக்குமேல் சுமார் 400 ரூபா அதிகமாகச் செலவாகிறது. இப்போதிருக்கும் சந்தாதாரர்களோடு இன்னும் 400 பேர் சேர்வார்களானால் வரவுக்கும் செலவுக்கும் சரியாய்விடும். ஆனால், வருடந்தோறும் நாம் வி. பி. யில் அனுப்பும் ஜனவரிமாதப் பத்திரிகையைச் சிலர் வாங்காமல் திருப்பி விடுகிறார்கள். அடுத்த வருடத்திலும் ஜனவரிமாதப் பத்திரிகை வழக்கப்படி வி. பி. யில் அனுப்பப்படும். அப்போதும் சிலர் திருப்பிவிட்டால், அவர்களுக்குப்பதிலாக மற்றுஞ் சிலர் சேரவேண்டும். ஆதலால் சைவசமய வளர்ச்சியை விரும்பும் ஒவ்வொரு அன்பரும் அடுத்த வருடத்து ஜனவரிமாதப் பத்திரிகையை எவரும் திருப்பாதபடி முயற்சிசெய்வதோடு, பலரையும் சந்தாதாரர்களாய்ச் சேர்த்து சைவப்பயிரை ஆர்வத்துடன் வளர்த்து வரும்படி பிரார்த்திக்கின்றோம். அன்றியும்,

சைவாபிமானமும் பதிபுண்ணிய பரிபாலன விருப்பமும் பொலிந்து விளங்கும் நாட்டுக்கோட்டை நகரத்து வைசிய சைவ சிகாமணிகளும் பிறர் சில பெரியோர்களும் செலுத்திய ஆயுள் சந்தாவைக் கொண்டு இப்பத்திரிகைக்கென ஒரு அச்சுக்கூடம் வைத்திருப்பது யாவரும் அறிந்ததே. இவர்கள் செய்த உதவிக்கு நாம் எந்நாளும் நன்றிபாராட்டக்கடவோம். ஆதலால் இதுவரையில் ஆயுள் சந்தாவை யுயர்த்த மனமெழவில்லை. ஆனால், இப்போது காகிதம் முதலிய எல்லாப் பொருள்களும் அளவுகடந்து விலையேறி விட்டமையாலும், நமது சைவச் செல்வி ஒன்றுக்கு ஒன்றரையாக வளர்ந்துவிட்டமையாலும், வருடச்சந்தா பன்னிரண்டணாவிலிருந்து ஒரு ரூபாவாக உயர்த்தப்பட்டமையாலும், சைவச்செல்வியை வளர்த்தற்பொருட்டு அருட்செல்வமும் பொருட்செல்வமும் ஒருங்குபெற்ற ஆயுள் சந்தாதாரர்களிருக்க நாம் அயலாரிடம் யாசிப்பது முறைமையன்றாதலினாலும், ஆயுள் சந்தாவைப் பத்து ரூபாவிலிருந்து பதினைந்து ரூபாவாக உயர்த்த நேரிட்டது. அழுதபிள்ளை தானே பால் குடிக்கும். இவ்வாறு உயர்த்தியது எவ்விதத்திலும் தவறாகாமல் முற்றிலும் பொருத்தமேயாம் என்பதை எவரும் உணராமற் போகார்.

இவ்வேற்பாட்டின்படி அடுத்தவருடத்து ஜனவரிமாதப் பத்திரிகை ஆயுள்சந்தாதாரர்களுக்கு 5 ரூபாவுக்கு வி. பி. யில் அனுப்படும். அதை நமது சைவச் செல்வியின் செவிலித் தாய்மார்க

ளாகிய ஆயுள்சந்தாதாரர்கள் எவரும் மறுக்காமல் மனக்களிப்போடு தொகை செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேம்.

இ. ஆதிமூலமுதலியார்,
பத்திரிகாசிரியர்.

சுப்பிரமணிய பரத்துவம்.

[தூத்துக்குடி சைவப்பிரகாச சமாஜப்பிரசுரம்.]

சைவசாஸ்திரங்களின் உண்மையை அறியாத பரசமயிகள், "கடவுளின் மகிமை ஓரளவிற்கு அவருடைய கிரியையினுலே பிரசன்னமாகின்றது. மனுஷனுடைய குணம் அவன் ஒழுக்கத்தினுல் விளங்குகின்றது. விருக்ஷத்தின் தன்மை கனியினுல் வெளிப்படும். அதுபோல நீங்கள் வழிபடும் கந்தசுவாமியின் தாரதம்மியத்தை அவருடைய விருத்தாந்தங்களால் கிரகிப்போம்" என்கிருர்கள். கந்தசுவாமியினிடத்தே பதிலக்ஷணம் இன்றென்பதற்கு அவர்கள் எடுத்துக் காட்டும் நியாயங்கள், கந்தபுராணச் சரித்திரங்களுள், அவர் சரீரங்கொண்டு பிறந்தமையும், தெய்வயானையம்மை வள்ளிநாயகியார் ஆகிய இருவரை விவாகஞ்செய்தமையும், ஆகிய இவை முதலியவைகளேயாம். ஆதலால் இவற்றினுண்மையை அறிவது சைவசமயிகளாகிய நம்மெல்லோர்க்குங் கடனேயாம். இங்கே கூறிய சுப்பிரமணியப்பெருமானுடைய சரீரம், தன்னைப்பந்தித்த மூலமலகாரணத்தினுலே தான் முன்செய்த கன்மானுசாரமாகத் தோல் எலும்பு முதலிய சத்த தாதுக்களாலாகிய சரீரங்கொண்டு ஒரு மாதாவின் யோனிவாய்ப்பட்டுப் பிறந்த கிறிஸ்து முதலாயினேர் சரீரம் போன்றதன்று; அப்பெருமானுடைய வடிவம் "ஞானவடிவம்" என்றும், சிவபெருமானுக்குரிய சுத்த சட்குணங்களும் கந்தசுவாமியுடைய ஆறு திருமுகங்களென்றும் புராணங்கள் கூறுகின்றன. பிரமாணம்: "ஞானந்தானுருவாகிய" எ-ம், "எவர்தம்பாலுமின்றியெல்லைதீ ரமலற்குள்ள—மூவிருகுணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்த" எ - ம் கந்தபுராணத்திற் கூறியிருத்தலைக் கண்டு தெளிக. இனிக் கந்தசுவாமி தெய்வயானையம்மை வள்ளியம்மையென்னும் இரண்டு பெண்களைப் புணர்ந்தார் பிரிந்தார் என்பதின் கருத்தே

தோவென்னில்; கூறுதும்:—ஆண் பெண் அலியென்னும் மூன்று மல்லாத பதியானவர், அக்கினியிற் சூடுபோலத் தமக்கு அபின்னமாயுள்ள சத்தியோடுகூடி. உத்தியோகித்துச் சங்கற்பித்தலே (அவ்வான்மாக்களது தோற்றத்துக்குக் காரணமாகிய தொழிலாகையால்), உகந்து புணர்தலெனவும், அச்சங்கற்பம் இல்லாமையே பிரிதலெனவும் சொல்லியதென அறிக. இனி அக்கினி சத்தி ஒன்றுயவழியும் சுடப்படுவதும் விளக்கப்படுவதும் அடப்படுவதுமாகிய விஷயத்தில் சூடு விளக்கம் அடுதலாகிய தொழிலினால் பலவாதல்போல, கந்தசுவாமியினது சத்தி ஒன்றுயவழியும் கிருத்திய பேதத்தால் இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி என மூவகைப்படும். கந்தசுவாமிக்கு இம்மூன்று சத்திகளுமே புராணங்களில் முறையே வள்ளியம்மை வேலாயுதம் தெய்வானையம்மை எனக்கூறப்பட்டன. நன்று நன்று இங்கே சொன்னவையாவுஞ் சரியே; இப்படிப்பட்ட பதியானவர் ஓர்பெண்ணை இச்சித்ததுமன்றி அவளைப் பின்சென்று கூத்தாடித்திரிவரோ என்பீராயின்; அவை தமதடியவராகிய நம்போலிகள் ஈடேறுமாறு அருளிச்செய்த திருவிளையாடல்களன்றி வேறல்ல. பிரமாணம்; கந்தபுராணம் "உலைப்படுமெழுகதென்னவுருகியே வொருத்திகாதல், வலைப்படுகின்றான்போல வருந்தியேயிரங்காநின்றான், கலைப்படு மதியப்புத்தேள் கலங்கலம் புனலிற்றோன்றி, யலைப்படு தன்மைத் தன்றோ வறுமுகனுடலெல்லாம்" என்பதனுலறிக. இது நிற்க.

புராணங்களெல்லாம் செம்பொருள் குறிப்புப்பொருளென இருவகைப்படுமென்றும், அவற்றைக் குருமுகமாக ஓதியுணர்ந்தாலன்றி அறிதல்கூடாதென்றும் கூறியிருக்க, சைவசாத்திரங்களையாவது புராணங்களுளொன்றையாவது ஒருசிறிதும் அறியாத பரசமயிகள் தமது குறும்புத்தியைக்கொண்டு அவற்றின் ஆழத்தை அறியத்துணிகின்றார்கள். அதுமட்டோ, தாம் முற்றும் அறிந்தவர்போலப் புராணங்களெல்லாம் பொய் பொய் என்றும் பிரசங்கிக்கின்றார்கள்.

சைவசமயிகளே! இப்பரசமயிகளது துர்ப்போதனைகளுக்குச் செவிகொடாது சற்சமயமாகிய சைவசமயத்துண்மைகளை ஆராய்ந்தறிந்து உய்யுங்கள்.